புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

===================================================================================

# சங்க இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறி

முனைவர் கு. கவிதா,
உதவிப்பேராசியர்,
ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி,
சுங்கான்கடை.

===================================================================================

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியங்களை அகம், புறம் என்று பிரிப்பர். காதலைப் பற்றிப் பாடும் பாடல்களை ‘அகம்’ என்றும், காதல் தவிர பிற செய்திகளைப் பாடும் பாடல்களைப் ‘புறம்’ என்றும் கூறுவர். அகப்பாடல்கள் கற்பனையான தலைவன், தலைவியின் காதலைப்பற்றி விளக்கியுரைக்கின்றன. புறப்பாடல்கள் நாட்டை ஆளும் அரசனின் வீரம், கொடை, சமூகத்திற்கு அரசன் ஆற்ற வேண்டிய கடமைகள், கல்வியின் சிறப்பு போன்றவற்றைக் கூறுகின்றன. பெரும்பாலான புறப்பாடல்கள் அரசனின் புகழைப் பாடுவனவாகவே உள்ளன.

பிற உயிர்களிடத்தில் அன்பும், இல்லாதவர்க்கு கொடுக்கும் அறமும் பெற்றிருக்கும் இல்வாழ்வை பயனுள்ள வாழ்வு. தானும் அறநெறி தவறாது வாழ்ந்து மற்றவரையும் அறவழியில் வாழ வைக்கும் இல்வாழ்க்கை தவ வாழ்க்கையை விட சிறந்தது.

இல்லறம் என்பது ஆண், பெண் இருவரையும் மனத்தாலும், உயிராலும், உணர்வாலும் திருமணம் என்ற நிகழ்வின் மூலம் ஒன்றுபடுத்துவது. திருமணம் என்பது ஒரு சடங்கு. இல்லறம் என்பது இரு இதயங்களின் அன்பு மட்டுமே கொண்டு வாழும் உண்மையான வாழ்வு. நல்ல இல்லறத்தை உருவாக்க, நல்ல குடும்பத்தை உருவாக்க நிறைய அன்பும், முகம் மலர்ச்சியும் போதும். இதனையே சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. ‘செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே’’ என்ற குறுந்தொகைப் பாடலில் செம்மண் நிலத்தில் பெய்த நீர் போல இல்லறத்தில் பாசம், பிரியம், பண்பு அன்புடன் உள்ளங்கள் கலக்க வேண்டும் என்கிறார். எவ்வளவோ செல்வமும், சுதந்திரமும் இருந்தாலும் இல்வாழ்க்கையில் பண்பும், பயனும் பெற அன்பும் அறனும் வேண்டும். இல்லறம் வெற்றி பெறுவதில் தான் வாழ்க்கையின் வெற்றி அடங்கியுள்ளது. உண்மையான இல்லறத்தில் உடல் அழகைவிட மன அழகே நிலைத்து நிற்கும். உண்மையான அன்பை தேய்ந்து விடாமல் காப்பது ஒவ்வொரு ஆணின், பெண்ணின் கடமையாகும்.

சங்க காலத்தில் இல்லற வாழ்வினை நமது முன்னோர்கள் புனிதமாக கருதி தெய்வீக உணர்வோடு, கணவனும், மனைவியும் விட்டுக்கொடுக்கும் குணத்துடன் வாழ்ந்தனர். மனைவி என்பவள் கணவனை தெய்வமாக மதித்து நடந்தாள் உலகத்தை கணவன் மூலமும் பார்த்தார்கள்.

அன்பு இல்லாதவர் எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர், அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர். இல்வாழ்வார்க்கு அமைய வேண்டிய இன்றியமையாத குணம் அன்பு. அது அகத்தே உணரப்படும் மென்மையான உணர்வு; இதற்குப் புறவடிவம் இல்லை. மணமான ஆண்-பெண் தாங்கள் ஒருவருக்காக ஒருவர் உள்ளதாக உணருவது அன்பின் முதல்படியாக அமையும். அன்புடைமைதான் மனிதனை மனிதனாக்குரியது. உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு அன்பு தான். மனிதநேயம், இரக்கம், பாசம் ஆகியவற்றை குறிக்கும் ஒரு நல்லொழுக்கமே அன்பு எனப்படுகிறது. இதனை சங்க இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

தமிழர்களின் வாழ்வில் மிக உயரிய பண்பாடுகளில் விருந்தோம்பல் இன்றியமையாத ஒன்றாகும். இத்தகைய பண்பாட்டினைத் தமிழ் இலக்கியங்கள் வாயிலாக நாம் அறியமுடிகிறது.

*விருந்தோம்பலில் தமிழர்கள் தலை சிறந்தவர்கள். தமிழ் இலக்கியங்கள் எல்லாவற்றிலும் தமிழர்களின் இச்சிறந்த பண்பைக் காணலாம். இல்லறத்திலே வாழ்வோர்க்குரிய கடமைகளில் "விருந்தோம்பல்" என்பதைச் சிறந்த கடமையாக அறநூல் குறிக்கின்றன.*

*ஈதல் இசைபட வாழ்தல் என்பது தமிழர் மரபு தொன்றுதொட்டு போற்றப்படும் நெறிமுறை. ஈதலின் அடிப்படை நமது பயன்பாட்டை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதில் உள்ளது. கொடுப்பதற்கு வரைமுறையில்லை, எதை வேண்டுமானாலும் கொடுக்கலாம். இயன்றதைக் கொடுக்கலாம். பணம், துணிமணிகள் நம்மிடம் அதிகம் உள்ள பொருள்கள், ஏன் நமது நேரம், அன்பு, பிரிவு என்று கொடுப்பதற்கு எல்லையே இல்லை. பகிர்ந்து கொள்வதில் உள்ள சந்தோஷத்தை மற்றவர்களும் அனுபவிக்க வேண்டும். "தவ்வி கொடுமின் தலைப்பட்ட போதே" என்ற திருமந்திரத்தின் வாக்குப்படி கண்சிவக்க கடுக்காமல் கை சிவக்க கொடுப்போம். இவையே சங்க இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள் ஆகும்.*

*திறவுச் சொற்கள்*

*அன்பு, விருந்தோம்பல், இல்லறம், ஈகை, நட்பு*

*முன்னுரை*

*செம்மொழி என்ற பெருமை தமிழுக்குக் கிடைக்கக் காரணமாக இருப்பன சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகும். இலக்கியங்கள் சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி ஆகும். சங்க கால மக்களின் வாழ்வியல், சமூகம், பண்பாடு, கலாச்சாரம் போன்றவற்றை சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம். பண்டைய தமிழ் மக்கள் தனி மனிதனையும் சமுதாயத்தையும் போற்றி வளர்க்கும் ஒழுக்க நெறியாக அறத்தைக் கருதினர். இவ்வறம் சங்கத் தமிழரின் அகப்புற வாழ்க்கையில் இரண்டறக் கலந்துவிட்ட நிலையினைச் சங்க இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ள முடிகிறது.*

*இல்லற மாண்பு*

*இல்லத்தில் இருந்து அற வாழ்வை மேற்கொள்வது இல்லறம் எனப்படும். தொல்காப்பியர் இல்லறவொழுக்கத்தை,*

*"மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்*
*இவைமுதல லாகிய இயல்நெறி பிழையாது*
*மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்*
*பிரிவோடு புணர்ந்தது கற்பெனப் படுமே" (செய்யுள்.179)*

*என்று குறிப்பார். களவு வெளிப்பட்ட பின் தமர் கொடுப்பக் கொள்ளும் மனவினை நிறைவேறிய பின் மலிவு, புலவி, ஊடல், உணர்வு, பிரிவு ஆகிய ஐந்து கூறுகளும் அடங்கிய பகுதியே கற்பென வழங்கப்பெறும். கற்பு என்பது தான் இல்லறவொழுக்கமாகும்.*

*பண்டைத் தமிழர் கற்பு வாழ்வை இல்லறம் என்றனர். அறமாவது யாதெனில்,*

*"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*
*ஆகுல நீர பிற" (குறள்.34)*

*என்பார் வள்ளுவர். உள்ளத்தில் குற்றமின்றி ஒருவன் வாழ்வதே அறம் சிறப்புடைய அறமே இல்வாழ்க்கை என்கிறார். வள்ளுவர்,*

*"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*
*பிறன்பழிப்ப இல்லாயின் நன்று" (குறள்.49)*

*பிறரால் பழிக்கப்படாத அறத்தோடு கூடிய வாழ்வை ஒருவன் வழுவாமல் வாழ்வான் என்றால் அவன் மிகவும் உன்னத நிலையை அடைவான் என்பதை,*

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள்.50)*

*எனவரும் குறளடிகளானது தெளிவாகப் புலப்படுத்துகிறது.*

*இல்லறச் சிறப்பு*

*மனையறம் புரிதலை மகளிரும், வினையறம் புரிதலை ஆடவரும் மேற்கொண்டதால் இல்லறம் சிறந்து விளங்கியது. இச்சிறப்பினை,*

*"மனையுறை வாழ்க்கை வல்லியாங்க*

*மருவி னினியபு முளவோ"* *(குறுந்.322)*

*என்று குறுந்தொகை குறிப்பிடுகின்றது. மனம் ஒத்த வாழ்வே இல்லற வாழ்வின் அடிப்படைப் பண்பாக விளங்குகிறது. ஓர் ஆடையைப் பகுத்து உடுத்தும் வறுமை நிலையிலும் மனம் ஒன்றி வாழும் வாழ்க்கைச் சிறப்பினை,*

*"ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்*
*ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"* *(பா.18)*

*என்று கலித்தொகை குறிப்பிடுகின்றது. தலைவனும், தலைவியும் இணைந்து இல்லறம் நடத்தும் சிறப்பினை,*

*"முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்*
*கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்*
*குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்*
*தான் றுழந் தட்ட தீம்புளிப் பாகர்*
*இனிதெனக் கணவ னுண்டலின்*
*நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே"* *(குறுந்.167)*

*எனவரும் பாடலடிகள் விளக்குகின்றன.*

*அன்புடைமை*

*இல்லறத்தில் அன்பு என்பது மிகவும் இன்றியமையாதது. செம்புலத்தில் ஒன்றிய நீர் போல தலைவனும் தலைவியும் தம்முள் மாறாத அன்பு பூண்டு ஒன்றிணைந்து வாழ்ந்தால் இல்லறமானது நல்லறமாகும் என்பதனை,*

*"செம்புலப் பெயல் நீர் போல*
*அன்புடை நெஞ்சந் தாங்கலந்தனவே"* *(குறுந்.49)*

*என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.*

*மனையிலேயே இருக்கக் கூடிய மகளிர்க்கு ஆடவரே உயிர். தலைவன் தலைவி இருவர் மாட்டும் உள்ள அன்பும் உறவும் பிறவி தோறும் தொடர வேண்டும் என்பது தலைவியின் விருப்பமாகும்.*

*"இம்மை மாறி மறுமை ஆரினும்*
*நீயாகியர் என் கணவனை*
*யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே"* *(குறுந்.49)*

*இந்தப் பிறவி மட்டுமில்லாமல், மறுபிறப்பு உண்டாயினும் என்னுடைய தலைவன் நீயே ஆக வேண்டும். உன்னுடைய மனம் விரும்பிய மனைவியாக நானே இருக்க வேண்டும் என்று தலைவி விரும்புகின்றாள்.*

*விருந்தோம்புதல்*

*சங்க காலத்தில் விருத்தோம்பலும் இல்லறத்துக்குரிய அறங்களுள் ஒன்றாக கருதப்பட்டது. பழந்தமிழர் விருந்தோம்பலை வாழ்க்கையின் உயிர் நாடியாகக் கொண்டனர்.*

*இல்லற வாழ்க்கையின் உயிர் துடிப்பாக விளங்குவது விருந்தோம்பலே என்பதை திருவள்ளுவரும்,*

*"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு"* *(குறள்.81)*

*என்ற குறள் மூலம் கூறியுள்ளார்.*

*"வரையாத் தாரம் வருவிருந்து அயரும்*
*தன் குடி வாழ்நர் அம் குடிச் சீறூர்"* *(நற்.135:3-4)*

*என்ற நற்றிணைப் பாடலில் உணவுப் பண்டங்களை வரும் விருந்தினர்களுக்குக் கொடுத்து பின்பு தாங்களும் உண்டனர் என்பது தெரிகிறது.*

*"அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்*
*முல்லை சான்ற கற்பின்*
*மெல் இயற் குறுமகள் உறைவின் ஊரே"* *(நற்.142)*

*என்பதில் இரவில் விருந்தினர் வந்தாலும் மனைவி கணவனுடன், இணைந்து மனமகிழ்ச்சியுடன் விருந்து கொடுப்பாள் என்கிறது நற்றிணை.*

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து" (குறள்.90)

என்பதில் வள்ளுவர் நம் வீடு தேடி வருகின்ற விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று இனிய மொழிகள் பேசி கனிவுடன் உபசரிக்க வேண்டும் என்கிறார்.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்வருந்து வானத் தவர்க்கு" (குறள்.86)

வந்த விருந்தினரைப் போற்றி அனுப்பிவிட்டு இனி வரும் விருந்தினரை எதிர்ப்பார்த்திருப்பவன். வானுலகத்தில் உள்ள தேவர்க்கும் நல்ல விருந்தினனாவான்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்கிறது மணிமேகலை. இராமனைப் பிரிந்து அசோகவனத்தில் இருக்கும் சீதை,

"அருந்து மெல்லடகு ஆரிட அருந்து மென்று அழுங்கும்
விருந்து கண்ட போது என் உறுமோ? என்று விம்மும்"
(கம்ப.காட்சிப்படலம்.15)

என்ற பாடலில் விருந்தினர்வரின் தானில்லாது இராமன் என்னி செய்வானோ என்று எண்ணிச் சீதை வருந்திய நிலையைப் புலப்படுத்துகிறது.

கோவலன், கண்ணகியைப் பிரிந்து பல ஆண்டுகள் மாதவியுடன் சேர்ந்து வாழ்கின்றான். மாதவியிடம் இருந்து பிரிந்து மீண்டும் கண்ணகியிடம் வந்தபோது கண்ணகி அழுகின்றாள். இத்தனை நாள் கோவலன் இல்லாமல் விருந்தோம்பல் செய்ய முடியவில்லையே என்று, இதனை,

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" (சிலம்.மதுரை.கொலை.73-75)

என்ற பாடல் தெரிவிக்கின்றது.

ஈகைச் சிறப்பு

எவ்வித பயனும் கருதாமல் ஒருவருக்கு ஒரு பொருளை அளித்தலே ஈகை எனப்படும். இதனை,

"ஆற்றுத லென்ப தொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்" (கலி.133)

என்று கலித்தொகை கூறுகின்றது. தனிமனித வாழ்வில் இரத்தல் இழிவாகக் கருதப்பெறினும் சமூக வாழ்வில் ஈகை உயர்ந்த அறமாகக் கருதப்பெற்றது.

"ஒருநாள் செல்லலம்; இருநாட் செல்லலம்;
பன்னாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ" (புறம்.101)

என்ற புறநானூற்றுப் பாடலில் அதியமானிடம் பரிசில் பெற தினமும் சென்றாலும் முதல்நாள் விருப்பத்துடன் வழங்கியது போலவே எல்லா நாளும் விருப்பத்தோடு வழங்குவான் என்கிறது. இதனையே கீழ்வரும் பாடல்களும் உணர்த்துகின்றன.

"பகடுதரு செந்நெல் போரொடு நல்கிக்
கொண்டி பெறுகஎன் றோனே" (புறம்.390)
"ஈதல் எளிதே, மாவண் தோன்றல்" (புறம்.121)
"எமக்குஈவோர் பிறர்க்குஈவோர்
பிறர்க்குஈவோர் தமக்குஈபவென" (புறம்.136)
"பிறரும் சான்றோர் சென்ற நெறியென,
ஆங்குப் பட்டன்று அவன் கைவண் மையே" (புறம்.134)

முடிவுரை

இல்லற வாழ்வில் அறப்பண்பினை வழுவாது கடைபிடித்து வந்தவர்கள் சங்கச் சான்றோர்கள். மனிதனின் வாழ்க்கையை விட்டு விலகிச் செல்லாத இலக்கியம் வாழ்வோடு ஒன்றிய இலக்கியமாகும். சங்க காலத்தில் பெண்கள் சிறப்புடன் இல்லறம் நடத்தியதையும், எந்த

*துன்பம் வந்த போதும் கணவனை விட்டு பிரியாமல், இருவரும் சேர்ந்து செயல்பட்டதையும், தன்னுடைய வறுமைநிலையை மற்றவர்களிடமிருந்து மறைத்தும் வாழ்ந்து வந்துள்ளனர். எத்தனை பிறவி எடுத்தாலும் தன்னுடைய கணவனே தனக்கு மீண்டும் கிடைக்க வேண்டும் என்று இருவரும் விரும்பியுள்ளனர். அதுமட்டுமல்லாமல் சங்கத் தமிழ்ர் விருந்தோம்பலை அறமாகப் போற்றியுள்ளனர். தாம் ஈட்டிய பொருளைக் கொண்டு தான் மட்டும் இல்லறம் நடத்தாமல், அவ்இல்லறம் நடத்துவதே வறியவர்களுக்கு ஈதல் எனும் கோட்பாட்டைக் கொண்டு தன்னால் இயன்ற மட்டும் முறையாக விருந்தோம்பல் செய்து சங்க மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தியுள்ளனர்.*

*துணைநூற்பட்டியல்*


1) சண்முகப்பிள்ளை, மு., - குறுந்தொகை மூலமும் உரையும், தலைவர் ஓலைச் சுவடித்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.

2) நச்சினார்க்கினியர் உரை - தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி

3) பாலசுப்ரமணியன், கு.வெ., (உ.ஆ.) - நற்றிணை மூலமும் உறையும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பிசிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.

4) பாலசுப்ரமணியன், கு.வெ., (உ.ஆ.) - புறநானூறு மூலமும் உறையும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பிசிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.

5) கிருட்டிணன், அ., - தமிழர் பண்பாட்டியல், தொகுதி ஒன்று, மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 600 001 டிசம்பர் 1992.

6) சிவஞானம், ம.பொ., - சிலப்பதிகார ஆய்வுரை, பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை - 600 004.

7) வேங்கடசாமி நாட்டார், ந.மு., ஔவை சு., துரைசாமிப்பிள்ளை - மணிமேகலை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை - 600 014.

8) கோபால கிருஷ்ணமாசாமியார், வை.மு., - கம்பராமாயணம், வை. மு., 17, தெளிசிங்கபெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.


********* ********* ********** ********* ********* ********** ********** **********